மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை - 2022
பயிற்சிப் பரீட்சை - 04

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2022

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2022

4

வினாத்தாள் - I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் : .....

- **பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.**
- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும், உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக**.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்தேன்	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	

www.ikeduk.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

- **1 ஆம் 2 ஆம் வினாக்களில் தரப்பட்ட மூன்று உருக்களில் ஒன்று வேறுபட்டது. அவ்வுருவைத் தெரிவு செய்க.**

01)


(1)


(2)


(3)


02)


(1)


(2)



(3)

03) அடைப்பினுள் இருக்கும் கூட்டத்துடன் சேர்ப்பதற்குப் பொருத்தமற்ற உருவைத் தெரிவு செய்க.






(1)



(2)



(3)

04) சதுரவடிவக் கடதாசித்துண்டு ஒன்று வெட்டப்பட்டு, ஒரு துண்டு தரப்பட்டுள்ளது. அதன் மீதித் துண்டைத் தெரிவு செய்க.






(1)



(2)



(3)


05) தரப்பட்டுள்ள உருக்கோலத்தில் வெற்றிடத்தில் வர வேண்டிய உருவைத் தெரிவு செய்க.




(1)


(2)



(3)


06) 


இவ் உருவில் இனங்காணக்கூடிய சதுரங்களினதும் முக்கோணிகளினதும் எண்ணிக்கை முறையே


(1) 10,5 (2) 11,6 (3) 10,6

07) கீழே உள்ள உருவானது அனைத்துப் பக்கங்களும் சம அளவுடையதாக கம்பிகளை மடித்து செய்யப்பட்ட உருவாகும். இங்கு A என்னும் இடத்தில் வெட்டப்பட்டு கம்பியினை விரித்தால் காணக் கூடிய உரு எது?




(1) 

(2) 


(3) 

08) கீழே தரப்பட்ட கோலத்திற்கேற்ப வினாக்குறி இடப்பட்ட கட்டங்களுக்குப் பொருத்தமான எண்களைக் கொண்ட அடைப்பினைத் தெரிவு செய்க.






(1)



(2)



(3)

09) வெற்றுக் கட்டங்களில் வரவேண்டிய கணிதக் குறியீடுகளைத் தெரிவு செய்க.

9		4		12	=	48

+, x (1) x , - (2) x , + (3)

10) தரப்பட்ட கவிதையின் பிரதான கருத்து யாது?


எதிர்கால சந்ததியினர் நலமாக வாழ
உளமார இன்றே மரக்கன்றை நட்டு
கோடை வெயில் தணிந்து மாரி பொழிந்திட
தரு எனும் வரத்தைப் பேணிக் காத்திடுவோம்.

(1) எதிர்கால சந்ததியினர் நலமாக வாழ வேண்டும்.
(2) மழை பொழிந்திட வெயில் குறைதல் வேண்டும்.
(3) இயற்கை வளமான தாவரங்களைப் பாதுகாத்தல் வேண்டும்.


11) அடுத்து வரும் மூன்று எண்களின் கூட்டுத்தொகை 63 ஆகும். எனின் அவற்றில் மிகச் சிறிய எண் யாது?


(1) 21 (2) 19 (3) 20

12) கீழே தரப்பட்ட அட்டையை மடித்து அமைக்கக் கூடிய சதுரமுகி வடிவம் எது?



(1) 


(2) 

(3) 

13) சதுர வடிவக் காணியொன்றைச் சுற்றி 32 கம்பங்கள் நாட்டி அதில் சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள் என்ற ஒழுங்கில் சம இடைவெளியில் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. எனின், ஒரு பக்கத்தில் நின்று பார்க்கும் போது தெரியும் கொடிகள் எத்தனை?

(1) 9 (2) 8 (3) 7

14)



இச் செவ்வக அட்டையில் இருந்து மிகப் பெரிய சதுர அட்டை ஒன்று வெட்டி எடுக்கப்பட்டது எனின் வெட்டி எடுக்கப்பட்ட சதுரத்தின் சுற்றி வர உள்ள நீளம் யாது?

(1) 50cm (2) 60cm (3) 40cm


15) முப்பது நாட்களைக் கொண்ட மாதமொன்றின் அனைத்துச் சனி, ஞாயிறு ஆகிய தினங்களும் விடுமுறை நாட்களாகும். இம்மாதத்தின் முதலாவது நாள் புதன் கிழமை எனின் அந்த மாதத்தில் உள்ள வேலை நாட்கள் எத்தனை?

(1) 21 (2) 22 (3) 23

16) 90 பேர் நின்ற வரிசை ஒன்றில் கீர்த்தி 49 ஆவது இடத்தில் நின்றான். கீர்த்தி நிற்கும் இடம் வரிசையின் மத்தியாக அமைவதற்கு வரிசையில் இன்னும் எத்தனை பேரைச் சேர்க்க வேண்டும்.

(1) 7 பேர் (2) 6 பேர் (3) 41 பேர்

17)



இவ் உருவானது ஒரே அளவான சதுரமுகிக் கட்டைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள சதுரமுகிக் கட்டைகள் எத்தனை?


(1) 10 (2) 11 (3) 14

18) அடைப்பினுள் உள்ள கட்டங்களில் உரோமன் எண்கள் ஒரு கோல ஒழுங்கில் தரப்பட்டுள்ளன. அவற்றுள் A,B ஆகிய கட்டங்களுக்குப் பொருத்தமான உரோமன் எண்கள் முறையே,

xvii		**i**	**iv**	
	xv		**iii**	**A**
	xiv		**viii**	
B		**X**		


(1) vi, xii (2) vi, xiii (3) xi, xiii

19) A,B ஆகிய தராசுகளில் பொருட்கள் காணப்படுகின்றன. B தராசினைச் சமப்படுத்துவதற்கு அத்தராசிலிருந்து நீக்க வேண்டிய உரு எது?.



(1) ✪ (2) ☆ (3) ❒


20) ஒரே அளவான சதுரமுகி வடிவான மரக்குற்றிகளைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட வடிவங்கள் உரு A , உரு B எனத் தரப்பட்டுள்ளன. உரு A இல் காட்டிய அமைப்பிற்கு வெளிப்புறமாகத் தீந்தை பூசுவதற்கு 70ml தீந்தை தேவைப்பட்டது. எனின் B இல் காட்டிய அமைப்பிற்கு வெளிப்புறமாகப பூசுவதற்குத் தேவையான தீந்தையின் அளவு யாது?



உரு A உரு B

(1) 140ml (2) 120ml (3) 150ml

21) மரக்குற்றியால் ஆக்கப்பட்ட சதுரமுகிக் குற்றி ஒன்று தரப்பட்டுள்ளது. அதனைப் புள்ளிக் கோடுகள் வழியே வெட்டி அதன் வெளிப்பகுதிகள் நீக்கப்பட்ட பின் கிடைக்கப்பெறும் திண்மவுரு வடிவத்தில் காணப்படும் விளிம்புகள் எத்தனை?




(1) 12 (2) 20 (3) 24

22) வர்ணா புத்தகமொன்றில் அரைவாசிப் பகுதியை முதல் நாளிலும் எஞ்சியதன் அரைவாசிப் பங்கினை இரண்டாம் நாளிலும் எஞ்சியதை மூன்றாம் நாளிலும் வாசித்து முடித்தான். அவன் மூன்றாம் நாள் வாசித்த பக்கங்களின் எண்ணிக்கை 20 எனின் அப்புத்தகத்தில் உள்ள தாள்களின் எண்ணிக்கை யாது?

(1) 80 (2) 40 (3) 160

23) அருகே P Q R S T U V ஆகிய எழுத்துக்களை உடைய வடிவப் பாதையில் P என்னும் இடத்தில் நாயும் பூனையும் உள்ளன. ஒரு தடவையில் பூனை மணிக்கூட்டு முள் சுற்றும் திசை வழியாக ஓர் எல்லையிலிருந்து அடுத்த எல்லைக்கு நகர்ந்து செல்லும் அதே நேரத்தில் நாய் அதற்கு எதிர்த்திசையில் ஒன்றுவிட்ட எல்லைக்கு நகர்ந்து செல்லும் எனின் நாயும் பூனையும் அடுத்து ஒரே இடத்தில் சந்திக்க எத்தனை தடவைகள் நகர்ந்து செல்ல வேண்டும்?



(1) 6 (2) 7 (3) 8

24) முகம் பார்க்கும் கண்ணாடியின் முன்னால் நின்று கொண்ட ஒரு சிறுவன் தனது உருவத்தைப் பார்த்துக் கூறிய கூற்றுக்களிடையே மிகச் சரியான கூற்று யாதாக இருக்கலாம்?

(1) இக் கண்ணாடி காட்டுபவரின் வயது எனது அண்ணாவின் வயதை ஒத்ததாகும்.

(2) இக் கண்ணாடி காட்டுபவரின் தாய் எனது தம்பியின் தாயாவார்.


(3) இக் கண்ணாடி காட்டுபவரின் தந்தை எனது அம்மாவின் தந்தையாவார்.

25) சூரியனின் ஒளி பட்டு பளபளவென்று மின்னுகின்ற பளிங்கு போன்ற பனித்துளிகளால் கோர்க்கப்பட்ட மாலையின் அழகு எல்லோரது கவனத்தையும் ஈர்த்தது. இக் கூற்றுப் பிழையானதாகும். அது ஏன் பிழையானது என்பதற்கான விடையைத் தெரிவு செய்க.

(1) சூரிய ஒளி பனித்துளிகள் மீது பட்டு பளிங்கு போன்று மின்னுவதில்லை.

(2) பனித்துளிகளால் கோர்க்கப்படும் மாலை அழகாக இருப்பதில்லை.

(3) பனித்துளிகளால் மாலை கோர்க்கப்பட முடியாது.

26) 


தரப்பட்டுள்ள பெரிய சதுரமுகிக் குற்றியைக் கோடுகள் வழியே எத்தனை தடவைகள் வெட்டும் போது 27 சிறிய சதுரமுகிக் குற்றிகளைப் பெற முடியும்.


(1) 6 தடவைகள்

(2) 8 தடவைகள்

(3) 16 தடவைகள்

27) கீழே தரப்பட்டுள்ள தாளில் A எனும் சதுர வடிவத் தாளானது புள்ளிக் கோடுகளின் வழியே மடிக்கப்பட்டு உரு B, உரு C, உரு D என்பன பெறப்பட்டுள்ளன. பின்னர் உரு D இல் காட்டப்பட்டுள்ளவாறு புள்ளிக்கோடுகளின் வழியே ஒரு பகுதி வெட்டி நீக்கப்பட்டது. பின்னர் அத்தாளை விரிக்கும் போது தோன்றும் சரியான உரு






(1) (2) (3)

28) முகேஸ் கடையில் பந்து வாங்கினான். பந்து வாங்குவதற்கு முன்னர் பேனாவும் அதன் பின்னர் மாம்பழமும் வாங்கினான். பந்து வாங்கிய பின்னர் பட்டம் வாங்கினான் எனின், முகேஸ் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை வாங்கிய பொருட்களை ஒழுங்கு முறையில் காட்டும் விடை எது?

(1) பேனா, பட்டம், மாம்பழம், பந்து

(2) மாம்பழம், பட்டம், பேனா, பந்து

(3) பேனா, மாம்பழம், பந்து, பட்டம்

29) 


குடும்ப உறுப்பினர் தொடர்பான விபரங்களை வரிப்படமும் கூற்றுக்களும் காட்டுகின்றன.

- A என்பவர் B,C இன் மகனாவார்
- D என்பவர் A யின் சகோதரர்
- A இற்கு ஒரு மகன் உள்ளார்
- D இற்கு E,F என இருபிள்ளைகள் உள்ளனர்

இக் கூற்றுக்களின் அடிப்படையில் வரிப்படம் 1,2 ஆகிய இலக்கங்களுக்குப் பொருத்தமான எழுத்துக்கள் முறையே

(1) A, F (2) D, G (3) F, G

30) போகன் பாடசாலையிலிருந்து வீட்டிற்கு வந்த பாதையை வரிப்படம் காட்டுகிறது. இவ் வரிப்படத்தின் படி போகன் இடது பக்கம் திரும்பும் சந்தர்ப்பங்கள் எத்தனை?




(1) 7 (2) 8 (3) 6

31) வெற்றிடத்தில் வரவேண்டிய மிகப் பொருத்தமான பழமொழியைத் தெரிவு செய்க.

நான் அவசரப்பட்டு முடிவுகளை எடுக்கும் போது ..... என்று தந்தை புத்திமதி கூறுவார். அவரது ஆலோசனைகளைக் கேட்டுச் செயற்பட்டிருந்தால் நான் அடிக்கடி தோல்விகளைச் சந்தித்திருக்க மாட்டேன்.

(1) அலை மோதும் போதே தலை முழுகு
(2) ஆழம் அறியாமல் காலை விடாதே
(3) அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்

32) 

தரப்பட்ட உருவில் உள்ள மூன்று வட்டங்களும் ஒரே அளவுடையவை. இதில் A இலிருந்து B வரையிலான நீளம் 9cm எனின், P இலிருந்து Q வரைக்குமான மொத்த நீளம் யாது?

(1) 18cm (2) 27cm (3) 36cm

33) மூன்று நண்பர்கள் விடுதியொன்றில் தங்கியிருந்த விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

- வாஸ் - 2 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை
- சுபன் - 4 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை
- சாகன் - 1 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை

இதனடிப்படையில் விடுதியில் மூவரும் ஒன்றாகத் தங்கியிருந்த நாட்கள் எத்தனை?

(1) 7 (2) 15 (3) 8

34) ஒரு பெட்டியில் இலக்கம் 2 எழுதப்பட்ட அட்டைகளும் இலக்கம் 5 எழுதப்பட்ட அட்டைகளும் உள்ளன. அட்டைகளின் மொத்த எண்ணிக்கை 11 ஆகும். எழுதப்பட்ட இலக்கங்களின் கூட்டுத்தொகை 46 ஆகும் எனின், இலக்கம் 2 எழுதப்பட்ட அட்டைகள் எத்தனை உள்ளன?


(1) 3 (2) 6 (3) 8

35) 45 தொடக்கம் 55 வரையான 5 இன் மடங்குகளைக் கொண்ட எண்களை எழுதும் போது இலக்கம் 5 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை

(1) பதின்மூன்று ஆகும். (2) நான்கு ஆகும். (3) ஆறு ஆகும்.

www.ikedu.lk

36) கீழே தரப்பட்டுள்ள தொடரின் ஆறாவது வரிசையில் காணப்படும் மாபிள்களின் எண்ணிக்கை யாது?



(1) 15 (2) 18 (3) 36

37) கரன் கடைக்குச் சென்று ரூபா 390.00 பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்து ரூபா 1000.00 காசுத்தாள் ஒன்றை வியாபாரிக்குக் கொடுத்தான். வியாபாரி கரனிற்கு ஐந்து காசுத் தாள்களில் மீதிப் பணத்தை வழங்கினார். அதன் படி, அக்காசுத்தாள் ஐந்தும்.

(1) ரூபாய் 500.00, ரூபாய் 50.00, ரூபாய் 30.00, ரூபாய் 20.00, ரூபாய் 10.00


(2) ரூபாய் 500.00, ரூபாய் 50.00, ரூபாய் 25.00, ரூபாய் 25.00, ரூபாய் 10.00

(3) ரூபாய் 500.00, ரூபாய் 50.00, ரூபாய் 20.00, ரூபாய் 20.00, ரூபாய் 20.00

38) பெட்டி ஒன்றில் 5 சிவப்பு நிறப்பேனாக்களும். அதனிலும் 7 கூடுதலான மஞ்சள் நிறப்பேனாக்களும், மஞ்சள் நிறப்பேனாக்களின் எண்ணிக்கையில் $\frac{1}{3}$ பங்கு பச்சை நிறப்பேனாக்களும் உள்ளன. இதன்படி பெட்டியில் உள்ள பச்சை நிறப்பேனாக்களின் எண்ணிக்கை யாது?

(1) 4 பேனாக்கள் (2) 7 பேனாக்கள் (3) 12 பேனாக்கள்

39) தரப்பட்டுள்ள அடைப்பினுள் நிறந்தீட்டப்படாத எல்லாக் கட்டங்களும் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. 947, 605, 348, 1234 ஆகிய எண்களை முறையே 1 தொடக்கம் 4 வரையான நிரைகளில் இடமிருந்து வலமாகவும், மேலிருந்து கீழாக ஐந்தாவது நிரலில் 185 எனும் எண்ணையும் குறித்து வலையமைப்பு நிரப்பப்பட்டது எனின், இரண்டாவது நிரையில் இடமிருந்து வலமாகவும் நான்காவது நிரலில் கீழிருந்து மேலாகவும் அமையும் எண்கள் முறையே,



(1) 6051, 445 (2) 6055, 544 (3) 445, 6051

40) சம்பவம் ஒன்று ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளது. அதனை ஒழுங்குபடுத்தும் போது சரியாக அமையும் இலக்க ஒழுங்கினைத் தெரிவு செய்க.

1. அதன் பின்னர் அழகிய மீன் இனங்களைப் பார்வையிட்டேன்.
2. முதலில் அங்குள்ள பல வண்ணப் பறவைகளைப் பார்வையிட்டேன்.
3. நான் எனது பெற்றோருடன் காலை ஒன்பது மணியளவில் மிருகக் காட்சிச்சாலைக்குச் சென்றேன்.
4. அபூர்வ மீன் இனங்களைப் பார்த்து ஆச்சரியமடைந்தேன்.
5. மிருகக்காட்சிச் சாலையைப் பார்வையிடுவதற்கான நுழைவுச் சீட்டை எனது பெற்றோர் பெற்றுக் கொண்டனர்.

(1) 3, 5, 2, 4, 1 (2) 3, 5, 1, 2, 4 (3) 3, 5, 2, 1, 4

www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை - 2022
பயிற்சிப் பரீட்சை - 4

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2022

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2022

4

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- **உமது சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின்** மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில் உள்ள** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன.
- **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழே கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற சரியான புள்ளிகளின் எண்ணிக்கை
02	
03	
04	
05	
06	
07	
08	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேர்பார்வை செய்தேன்	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

பல வர்ண மின்விளக்குகள் காலி முகத்திடலைச் சொர்க்க புரியாக மாற்றிக் கொண்டிருந்தன. பட்டம் விடும் சிறுவர்கள் இந்த வர்ண ஒளியில் பட்டம் ஏற்றி விளையாடிக் கொண்டிருந்தார்கள். வானளாவிப் பறந்த அப்பட்டங்கள் வானில் தெரியும் பல வர்ணத் தாரகைகள் போன்று தென்பட்டன. மாலைப் பொழுது விடைபெற்றுக் கொண்ட போதும் காலி முகத்திடலை விட்டுப் பிரிய மனமின்றிப் பலர் அங்கும் இங்கும் உலாவிக் கொண்டிருந்தனர். கடல் நீரும் நீலவானும் கைகோர்க்கும் காட்சியினைக் கண்டு மகிழ்ந்தவண்ணம் நானும் இருப்பிடம் நோக்கிப் பயணமானேன்.

- **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i. காலி முகத்திடலைச் சொர்க்க புரியாக மாற்றிக் கொண்டிருந்தவை எவை?

.....

ii. சிறுவர்கள் எங்கே பட்டம் ஏற்றி விளையாடிக் கொண்டிருந்தார்கள்?

.....

iii. நட்சத்திரங்கள் என்பதன் ஒத்தகருத்தைக் குறிப்பிடுவதாகப் பந்தியில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் எது?

.....

iv. பந்தியில் இடம்பெற்றுள்ள இணைமொழி ஒன்றை எழுதுக.

.....

v. காலப் பெயர்ச் சொல் ஒன்றை எழுதுக.

.....

vi. நான் எந்தக் காட்சியைக் கண்டு மகிழ்ந்த வண்ணம் இருப்பிடம் நோக்கிப் பயணமானேன்?

.....

2. பின்வரும் வாக்கியத்தின் சொற்களில் உள்ள பிழையான எழுத்துக்களைத் திருத்தி மீண்டும் எழுதுக.

நூலகத்திலுள்ள புத்தகங்களை ஒலிப்படம் எடுப்பது தண்டணைக்குரிய குற்றமாகும்.

.....

.....

3. **பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியாக்கி எதிர்கால வினைச் சொல் சேர்த்து வாக்கியங்களை மீண்டும் எழுதுக.**

i. பருந்து வானத்தில வட்டமிடுகின்றது.

.....

ii. சிறுவர்கள் கடற்கரையிலை சென்று பட்டம் விடுகின்றார்கள்.

.....

4. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுக.

i. எங்களால் / இரண்டு / நகருக்குள் / காண முடிந்தது / காலி / அம்சங்களை / நுழைந்ததுமே

.....

ii. ஒரு / கருத்துக்களைக் / நல்ல / நூலாகும் / ஆத்திசூடி / பல / கூறுகின்ற

.....

5. பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்றார் ஔவையார்

www.ikeau.lk

6. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரும் வெளிப்படுத்தும் கருத்தை கீறிட்ட இடங்களில் எழுதுக.

i. நாக்குப்புரளுதல்.....

ii. வாயூறுதல் .....

7. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் "✓" எனவும் பிழையாயின் "✕" எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

i. ஆடுகள் வயலை நோக்கிச் செல்லும். ( )

ii. ஒவ்வொரு புத்தகமும் நல்லவை. ( )

iii. குரங்குகள் மரத்திற்கு மரம் தாவுகின்றது. ( )

iv. மல்லிகைக் கொடியினது பூக்கள் மணம் வீசின. ( )

8. பின்வரும் பழமொழிக்குப் பொருத்தமான கருத்தினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

கடனில்லாத கஞ்சி கால் வயிறு போதும்.

.....

9. பின்வரும் இணைமொழிகளில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்து வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.

(கையும் மெய்யும், ஓடி ஆடி, அக்கம் பக்கம், இன்ப துன்ப)

i. பெண்கள் வயலில் .....வேலை செய்தனர்.

ii. நாங்கள் உற்றார் உறவினர்களின் ..... நிகழ்வுகளில் கலந்து கொள்ள வேண்டும்.

10. பின்வரும் வாக்கியத்தை ஒன்றன் பால் ஒருமை நிகழ்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

இந்த மாம்பழங்கள் மிகவும் சுவையாக இருக்கின்றன.

.....

11. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

i. Calendar ..... ii. Post office .....

12. ஒவ்வொரு படத்துக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைக் கட்டத்தினுள் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.





i.

	i		d	

ii.

B		c		c		

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

i. wash / before / We / meals / hands / our

.....

ii. to / like / I / netball / play

.....

www.ikedu.lk

14. 'ரோகல' **என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**


……

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.
உங்களுக்குத் தண்ணீர் வேண்டுமா?

……


16. இருபத்தாறாயிரத்து தொண்ணூற்று ஒன்பது என்னும் எண்ணுடன் ஒன்றைக் கூட்டும் போது கிடைக்கும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

……

17. 


கட்டத்தில் உள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி அமைக்கக் கூடிய மிகச் சிறிய நான்கிலக்க எண்ணை எழுதுக.

……

18. 
கட்டத்தில் உள்ள இலைகளின் எண்ணிக்கையை உரோமன் எண் குறியில் காட்டுவதற்கு எத்தனை தீக்குச்சிகள் தேவைப்படும்.

…….. தீக்குச்சிகள்

19. தரப்பட்ட உருவில் 0.5 இற்கு நிறந்தீட்டுக.



20. ஒரு சந்தையில் 1072 மாம்பழங்களும் 846 பப்பாசிப்பழங்களும் உள்ளன.

i. சந்தையில் உள்ள பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

……

ii. சந்தையில் உள்ள பப்பாசிப் பழங்களிலும் பார்க்க எத்தனை மாம்பழங்கள் கூடுதலாக உள்ளன?


……

21. 816 இனை 8 இனால் வகுக்கும் போது கிடைக்கும் விடை யாது?

……

22. ஒரு பையில் 225g மா உள்ளது. அவ்வாறான 5 பையில் உள்ள மாவின் மொத்த நிறை யாது?

……Kg……g


23. 
இவ்விரிப்பை மடித்து இணைக்கும் போது கிடைக்கும் திண்ம உருவின் பெயர் யாது?

……

www.ikedu.lk


24. வீட்டிலிருந்து மு.ப. 10.30 இற்கு புறப்பட்ட பூமிகா 3 மணித்தியாலங்கள் 40 நிமிடங்கள் பயணித்த பின்னர் கண்டியை அடைந்தாள். பூமிகா கண்டியைச் சென்றடைந்த நேரத்தினை 24 மணித்தியாலக் கடிகாரம் காட்டும் விதத்தில் தருக.

.....

25. 

படத்தில் 500m*l* கொள்ளளவுள்ள பாத்திரத்தின் ஒரு பகுதி நீரினால் நிரப்பப்பட்டுள்ளது. அப்பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீர் தேவை?

.....m*l*

26. 

இவ்வுருவினுள் காணக் கூடிய செங்கோணங்கள் எத்தனை?

.....


27. குமார் வீட்டிலிருந்து வடக்கே 100m தூரம் சென்று, இடது கைப்பக்கமாகத் திரும்பி 50m தூரம் சென்று பாடசாலையினை அடைந்தான் அவன் சென்ற தூரம் யாது?

.....m

28. பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

பொருள்	வாங்கிய அளவு	1kg இன் விலை		பெறுமதி	
		ரூபா	சதம்	ரூபா	சதம்
மா	250g	i. ……..	……...	65	00
சீனி	4kg	95	00	ii. ……	…….
வெங்காயம்	100g	iii. …….	……...	30	00
மொத்தம்				iv…….	…..

29. மாணவர் குழுவொன்று அதிகம் விரும்பும் நிறவகை பற்றிய தகவல்கள் வரைபில் தரப்பட்டுள்ளன.



i. பச்சை நிறத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை 9 ஆகும். அதனை வரைபில் குறித்துக் காட்டுக.

ii. குழுவில் மொத்தமாக எத்தனை மாணவர்கள் உள்ளனர்?

.....

www.ikeau.lk

- **30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. வறண்ட பகுதிகளில் வளரும் தாவரம் பின்வருவனவற்றுள் எது?
(1) தேயிலை (2) நாகதாளி (3) பலா

31. ஆடி, ஆவணியில் பூக்கும் தாவரங்கள் முறையே
(1) இலுப்பை, நாவல் (2) நாவல், கொன்றை (3) கொன்றை, வாகை

32. வலை பின்னுதல் மூலம் தனது வாழ்விடத்தினை அமைக்கும் பிராணி எது?
(1) சிலந்தி (2) பாம்பு (3) எறும்பு

33. உடல், உளச் சுகத்திற்கான செயற்பாட்டில் உள் மூச்சு வாங்குதல், வெளி மூச்சு விடுதல் ஆகிய செயற்பாடுகள் இடம்பெறும் படி முறை யாது?
(1) உள்ளத்தைத் தளர்த்துதல் (2) உடலைத் தளர்த்துதல் (3) மனதைத் தளர்த்துதல்

34. தேசியக் கொடியின் உள்ளேயுள்ள நான்கு அரசமிலைகள் குறித்து நிற்கும் பண்புகள்
(1) இரக்கம், பற்றின்மை, திருப்தி, காருண்யம்
(2) திருப்தி, தன்னிறைவு, இரக்கம், தர்மம்
(3) அன்பு, வீரம், இரக்கம், திருப்தி

35. பின்வருவனவற்றுள் வித்துக்களை நீக்கிய பின் உணவிற்குப் பயன்படுத்தப்படுவது எது?
(1) கத்தரி (2) புடோல் (3) வெண்டி

36. பின்வருவனவற்றுள் சமயம் சார்ந்த அலங்கரிப்பு அல்லாதது எது?
(1) கோலம் போடுதல் (2) வெசாக்கூடு (3) அச்சுப்பதித்தல்


37. வண்ணத்துப் பூச்சியின் வாழ்க்கை வட்டத்தின் முதலாவது பருவ நிலை யாது?
(1) முட்டை (2) கூட்டுப்புழு (3) குடம்பி

38. மரவேலை செய்வோர், கட்டட வேலை செய்வோர், கொல்லன் பட்டறையில் வேலை செய்வோர் பயன்படுத்தும் உபகரணங்கள் முறையே,
(1) சீவுளி, தூக்குக்குண்டு, உளி
(2) மணியாசு, துறப்பணம், புகைதுருத்தி
(3) உளி, நீர்மட்டம், புகைதுருத்தி

39. தரமான பொருளுக்கான இலங்கைத் தரச்சான்றிதழ்க் குறியீடு எது?
(1) ISO (2) SLS (3) SLE

40. பின்வருவனவற்றுள் அலங்காரத் தையல் வகைகளை மாத்திரம் கொண்ட விடை எது?
(1) கம்பளித் தையல், பெரு நூலோடி
(2) சிறு நூலோடி, சங்கிலித் தையல்
(3) சங்கிலித் தையல், கம்பளித் தையல்

41. உருவில் காட்டப்பட்ட அமைப்பு சைக்கிளில் காணப்படுகின்றது.
இதன் பயன்பாடு யாது?
(1) சைக்கிளை இலகுவாக திருப்புவதற்கு
(2) சைக்கிளை இலகுவாக ஓட்டிச் செல்வதற்கு
(3) சைக்கிளில் பாரம் ஏற்றிச் செல்வதற்கு



42. தமது சுற்றுப் புறச் சூழலைச் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருப்பதால் கிடைக்கும் நன்மை அல்லாதது எது?
(1) ஈக்கள் நுளம்புகளிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கும்.
(2) சூழல் மாசடையும்.
(3) உடலுக்கும் உள்ளத்திற்கும் இதமான ஒரு சூழலில் வாழ்தல்.

43. பண்டைய தொடர்பாடல் முறையை மட்டும் கொண்ட விடை எது?
(1) முரசறைதல், பிராணிகள் மூலம்
(2) பத்திரிகை, வானொலி
(3) தீமூட்டுதல், தொலைக்காட்சி

44. முதலாந் தரம் தொடக்கம் பல்கலைக்கழகம் வரையில் இலவசக் கல்வி வழங்குதல், தாய் மொழியைக் கல்வி ஊடாக மொழியாக்குதல், பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றல் போன்ற சேவைகளை வழங்கவேண்டுமெனக் கூறியவர்.


(1)



(2)


(3)

45. மாதங்கியின் வீடு மாத்தளையிலும் பிரியங்கியின் வீடு பதுளையிலும் அமைந்துள்ளன. இருவரினதும் வீடுகள் அமைந்துள்ள மாகாணங்கள் முறையே
(1) வடமத்திய மாகாணம், மத்திய மாகாணம்
(2) மத்திய மாகாணம், ஊவா மாகாணம்
(3) ஊவா மாகாணம், தென் மாகாணம்

46. மின்னேரியாக் குளத்தைக் கட்டிய மன்னன் யார்?
(1) தாதுசேனன் (2) பண்டுகாபய மன்னன் (3) மகாசேனன்

47. மழை நீரைச் சேகரித்து மீண்டும் பயன்படுத்தும் முறை அல்லாதது.
(1) குழாய்க் கிணறுகளை அமைத்து நீரைப் பெறுதல்
(2) குளங்கள், அணைக்கட்டுக்கள் அமைத்து பயிர்ச்செய்கைக்கான நீரைப் பெறுதல்
(3) வீடுகளில் தொட்டிகள் அமைத்து மழை நீரைச் சேகரித்துப் பயன்படுத்துதல்

48. 

தரப்பட்ட மின்காந்த அமைப்பில் குண்டூசிகள் அதிகமாகக் கவரப்படும் இடங்களை மாத்திரம் கொண்ட விடை எது?
(1) C,D (2) A,B (3) A,C

49. மின்னல் ஏற்படும் வேளையில் செய்யக் கூடாத செயல் எது?
(1) தொலைக்காட்சி பார்த்தல்
(2) வீட்டினுள் இருத்தல்
(3) வகுப்பறையில் பாடம் படித்தல்

50. வைத்தியரினால் நோயாளிக்கு வழங்கப்படும் மருந்தினைக் குடிக்க முன்பு அவதானிக்க வேண்டிய விடயம்
(1) மருந்து உற்பத்தி செய்த இடம்
(2) ஒரு வேளைக்கு எடுக்க வேண்டிய மருந்தின் அளவு
(3) மருந்தில் உள்ளடங்கிய பொருட்கள்

51. நேரடியாக குழிகளில் நடப்படும் பயிர்வகைகள் மாத்திரம் கொண்டமைந்த விடையினைத் தெரிவு செய்க.
(1) வெண்டி, கத்தரி, பாகல்
(2) புடோல், பூசணி, பயற்றை
(3) பயற்றை, பூசணி, மிளகாய்

52. கீழே உள்ள கருவியை பயன்படுத்துவோரை மட்டும் கொண்ட விடை யாது?




(1) மாலுமி, நாடோடி, விமானி
(2) மாலுமி, விவசாயி, மேசன்
(3) மேசன், விமானி, மீனவன்

53. பொதுப் போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்துவதனால் கிடைக்கும் அனுகூலங்களை மாத்திரம் கொண்டமைந்த விடையினைத் தெரிவு செய்க.
(1) குறைந்த செலவில் பயணிக்க முடிதல்,அதிகளவானோர் பயணிக்க முடிதல்.
(2) எந்த நேரத்திலும் பயணிக்க முடிதல், செலவு அதிகமாக இருத்தல்.
(3) பொருள்களைக் கொண்டு செல்ல முடியாது, பாதுகாப்பானது.


54. உணவுகளைச் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் பேணாமை காரணமாக எமக்கு ஏற்படும் நோய் எது?
(1) மலேரியா (2) சின்னமுத்து (3) வாந்திபேதி

55. இலங்கைக்கே உரித்தான பறவை, முலையூட்டி, நகருயிர் போன்ற பிராணிகளை முறையே கொண்டமைந்த விடை எது?
(1) சபன் கோழி, மரநாய், கொம்பு ஓணான்
(2) காட்டுக் கோழி, மள்புளுட்டா, சுண்டெலி
(3) புலத்ஹய்யா, கருங்குரங்கு, நீர்ப்பாம்பு


56. பின்வருவனவற்றுள் ஒளிரும் மின்குமிழ் எது?



(1)



(2)



(3)

57. தேசிய மரபுரிமைகளைப் பேணிப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் நாட்டுக்கு கிடைக்கும் நன்மை
(1) பண்பாட்டுப் பெறுமானம் நாளுக்கு நாள் அதிகரிக்கும்.
(2) தமது நாட்டின் தனித்துவம் பாதுகாக்கப்படாது.
(3) பண்பாட்டைச் சந்ததி சந்ததியாக கையளிப்பது கடினம்.

58. பின்வருவனவற்றுள் தேசிய இலச்சினை காணப்படும் இடம் எது?
(1) பிரதேச செயலகம் (2) தனியார் அங்காடி (3) ஆலயம்

59. போலியான, தரக்குறைவான பண்டங்கள் விற்பனை செய்யப்படுமாயின் அது குறித்து அறிவிக்க வேண்டியது.
(1) பிரதேச செயலகம்
(2) நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை
(3) நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை

60. "நான் மரம் ஒன்றினை நாட்டியபோது, எனது மனதில் தோன்றிய எண்ணங்கள்" என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்)

i. ……

……

ii. ……

……

iii. ……

……

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

பயிற்சிப் பரீட்சை 4 (18.08.2022)

தரம் 5 **புள்ளித்திட்டம்**

4

வினாத்தாள் I (விடைகள்)

01)	2	11)	3	21)	3	31)	2
02)	1	12)	1	22)	2	32)	3
03)	3	13)	1	23)	2	33)	3
04)	3	14)	3	24)	2	34)	1
05)	2	15)	2	25)	3	35)	2
06)	1	16)	1	26)	1	36)	2
07)	1	17)	3	27)	3	37)	3
08)	2	18)	1	28)	3	38)	1
09)	3	19)	3	29)	1	39)	1
10)	3	20)	2	30)	2	40)	3

வினாத்தாள் II (விடைகள்)

வினா இல		விடைகள்	புள்ளிகள்
01)	(i)	பல வர்ண மின்விளக்குகள்	01 புள்ளி
	(ii)	காலி முகத்திடலில்	01 புள்ளி
	(iii)	தாரகைகள்	01 புள்ளி
	(iv)	அங்கும் இங்கும்	01 புள்ளி
	(v)	மாலை / மாலைப்பொழுது	01 புள்ளி
	(vi)	கடல் நீரும் நீலவானும் கைகோர்க்கும் காட்சியினை	01 புள்ளி
02)	நூலகத்திலுள்ள புத்தகங்களை ஒளிப்படம் எடுப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.		01 புள்ளி
03)	(i)	பருந்து வானத்தில் வட்டமிடும்.	01 புள்ளி
	(ii)	சிறுவர்கள் கடற்கரைக்குச் சென்று பட்டம் விடுவார்கள்.	01 புள்ளி
04)	(i)	காலி நகருக்குள் நுழைந்ததுமே இரண்டு அம்சங்களை எங்களால் காண முடிந்தது	01 புள்ளி
	(ii)	ஆத்திசூடி நல்ல பல கருத்துக்களைக் கூறுகின்ற ஒரு நூலாகும்.	01 புள்ளி
05)	"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்றார் ஔவையார்.		01 புள்ளி
06)	(i)	சொன்ன சொல் தவறுதல்.	01 புள்ளி
	(ii)	ஆசைப்படுதல்.	01 புள்ளி
07)	(i)	✓	01 புள்ளி
	(ii)	x	01 புள்ளி
	(iii)	x	01 புள்ளி
	(iv)	✓	01 புள்ளி
08)	மானத்துடன் வாழ வேண்டும்.		01 புள்ளி

www.ikedu.lk

09)	(i)	ஓடி ஆடி	01 புள்ளி
	(ii)	இன்ப துன்ப	01 புள்ளி
10)	இந்த மாம்பழம் மிகவும் சுவையாக இருக்கின்றது.		01 புள்ளி
11)	(i)	நாட்காட்டி	01 புள்ளி
	(ii)	அஞ்சல் அலுவலகம்	01 புள்ளி
12)	(i)	Birds	01 புள்ளி
	(ii)	Bicycle	01 புள்ளி
13)	(i)	We wash our hands before meals	01 புள்ளி
	(ii)	I like to play netball	01 புள்ளி
14)	வைத்தியசாலை		01 புள்ளி
15)	ஒயாட்ட வத்துர ஓனத?		01 புள்ளி
16)	26100		02 புள்ளிகள்
17)	6089		02 புள்ளிகள்
18)	3		02 புள்ளிகள்
19)	5 இற்கு நிழற்ற வேண்டும்.		02 புள்ளிகள்
20)	(i)	1918	02 புள்ளிகள்
	(ii)	226	02 புள்ளிகள்
21)	102		02 புள்ளிகள்
22)	1 125		02 புள்ளிகள்
23)	கனவுரு		02 புள்ளிகள்
24)	14:10		02 புள்ளிகள்
25)	400		02 புள்ளிகள்
26)	4		02 புள்ளிகள்
27)	150		02 புள்ளிகள்
28)	(i) 260.00 (ii) 380.00 (iii) 300.00 (iv) 475.00		04 புள்ளிகள்
29)	(i)	9 வரை நிழற்ற வேண்டும்	01 புள்ளி
	(ii)	35	01 புள்ளி

30)	**2**	36)	**3**	42)	**2**	48)	**3**	54)	**3**
31)	**2**	37)	**1**	43)	**1**	49)	**1**	55)	**1**
32)	**1**	38)	**3**	44)	**3**	50)	**2**	56)	**3**
33)	**2**	39)	**2**	45)	**2**	51)	**2**	57)	**1**
34)	**1**	40)	**3**	46)	**3**	52)	**1**	58)	**1**
35)	**2**	41)	**2**	47)	**1**	53)	**1**	59)	**2**

(30 புள்ளிகள்)

60) பொருத்தமான வாக்கியங்கள் (6 புள்ளிகள்)

- முழு விடைத்தாளையும் கருத்தில் கொண்டு உறுப்பமையவும் தெளிவாகவும் எழுதப்பட்டிருப்பின் 2 புள்ளிகள் வழங்குக.

www.lkedu.lk